சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
பாடசாலை வராந்த வேலைத்திட்டம் - 2020
முதலாம் தவணை



தேர்ச்சி – 7.0
தேர்ச்சி மட்டம் – 7.2
2021, 10th week (2021.3.20)

செயற்பாடு – 7.2.1
பாடவேளை – 2 (80 நிமிடங்கள்)

# பகுதி ‘‘ அ’’

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட குகை சித்திரங்களின் காலப்பகுதி எது?

1. 50000-30000 2. 140000-50000 3. 10000-20000 4. 40000-10000 5. 20000-10000

02. ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தினை குறிக்கும் மற்றுமொரு பெயர் என்ன ?

1. மேல் பேலியோத்திய காலம்
2. மொசப்பத்தேமியா காலம்
3. மொஹஞ்சதாரோ ஹரப்பா
4. காந்தாரக்கலை
5. ஹெலனிஸ்ட்ரிக் யுகம்

03. இக்குகை சித்திரங்கள் தோற்றம் பெறுவதற்கு எதுவாக அமையாத காரணி எது?

1. வேட்டையினை அதிகரித்துக்கொள்வதற்கு
2. இருப்பிடத்தினை அலங்கரிக்க
3. இறந்த உயிர்களின் ஆத்ம சாந்திக்கு
4. ஆவிகளின் பூஜைக்காக
5. பொழுதினைக்கழிக்க

04. ஆதி கால மனிதனானவன் குகைச்சித்திரங்களை வரைவதற்கு பயன்படுத்திய நுட்பமுறை அல்லாதது எது?

1. இரேகை முறை
2. வர்ண ஓவியம்
3. கீறி சுரண்டி
4. கர,கால் அச்சுப்பதித்தல்
5. ஒட்டுதல்

05.17000 காலத்துக்குரிய பிரான்ஸ் நாட்டினை சேர்ந்த பெண்டினாக் நகரை அண்மித்துள்ள ‘’**எருதுகளின் குகை** ‘’ என அழைக்கப்படும் குகை எது ?

1. லஸ்கோ குகை
2. அல்டமீரா குகை
3. பொண்டிகோமி குகை
4. ஷூவே குகை
5. கோகுல் குகை

**இல 06 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பின்வரும் A,B,C,D,E ஆகிய உருவங்களைப் பயன்படுத்தி விடை எழுதுக.**



A



B



C



D



E

06. லஸ்கோ குகை சித்திரங்களில் ஒன்றான குதிரை எனும் சித்திரத்தினை குறிக்கும் எழுத்து எது ?

.................................

07 அல்டமீரா குகையில் உள்ள எருது சித்திரத்தினை குறிக்கும் எழுத்து எது ?

.................................

08. ஷூவே குகையில் காணப்படும் குதிரை உருவினை காட்டும் எழுத்து எது ?

.................................

09. மெம்மத் உருவினை கொண்ட ஷூவெ குகை ஓவியத்தினைக் காட்டும் எழுத்து எது?

............................

10. பொண்டிகோமியில் உள்ள கருங்குதிரை எனும் உருவினைக்கட்டும் எழுத்து எது ?

.............................

# பகுதி ‘’ஆ’’

- **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குகை ஓவியங்கள் காணப்படும் இடங்கள் , குகையின் பெயர்கள், ஓவியங்கள் என்பவற்றை அட்டவணைப்படுத்துக.
2. ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட காலக்குகை ஓவியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள நுட்பமுறை, ஊடகம் என்பவற்றை குறிப்பிடுக.
3. இக்குகை ஓவியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள கருப்பொருள்கள் எவை?
4. ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட காலக்குகை ஓவியங்கள் மற்றும் இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட காலக்குகை ஓவியங்களின் சிறப்பியல்பு பற்றி ஒப்பிட்டு நோக்குக.
5. எருதுகளின் மண்டபம் என வர்ணிக்கப்படும் ‘’**லஸ்கோ**’’ குகையின் சிறப்பு பற்றி விளக்குக.